## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-5 - கலையும் கரியும்
## (திருச்சாளக்கிராமம்)

988 * கலையும் கரியும் பரிமாவும் * திரியும் கானம் கடந்து போய் *
சிலையும் கணையும் துணையாகச் * சென்றான் வென்றிச் செறுக்களத்து **
மலை கொண்டு அலைநீர் அணை கட்டி * மதிள் நீர் இலங்கை வாள் அரக்கர்
தலைவன் * தலை பத்து அறுத்து உகந்தான் * சாளக்கிராமம் அடை -
நெஞ்சே! 1

989 கடம் சூழ் கரியும் பரிமாவும் * ஒலி மாந்தேரும் காலாளும் *
உடன் சூழ்ந்தெழுந்த கடி இலங்கை * பொடியா வடிவாய்ச் சரம் துரந்தான் **
இடம் சூழ்ந்து எங்கும் இருவிசும்பில் * இமையோர் வணங்க மணம் கமழும் *
தடம் சூழ்ந்து எங்கும் அழகாய * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 2

990 உலவு திரையும் குலவரையும் * ஊழி முதலா எண் திக்கும் *
நிலவும் சுடரும் இருளுமாய் நின்றான் * வென்றி விறலாழி
வலவன் ** வானோர் தம் பெருமான் * மருவா அரக்கர்க்கு எஞ்ஞான்றும்
சலவன் * சலம் சூழ்ந்து அழகாய * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 3

991 ஊரான் குடந்தை உத்தமன் * ஒருகால் இருகால் சிலை வளைய *
தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் * வற்றா வருபுனல் சூழ்
பேரான் ** பேராயிரம் உடையான் * பிறங்கு சிறை வண்டு அறைகின்ற
தாரான் * தாரா வயல் சூழ்ந்த * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 4

992 அடுத்தார்த்து எழுந்தாள் பிலவாய் விட்டலற * அவள் மூக்கு அயில் வாளால்
விடுத்தான் * விளங்கு சுடராழி * விண்ணோர் பெருமான் நண்ணார் முன் **
கடுத்தார்த்து எழுந்த பெருமழையைக் * கல்லொன்று ஏந்தி இனநிரைக்காத்
தடுத்தான் * தடம் சூழ்ந்து அழகாய * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 5

993 தாயாய் வந்த பேய் உயிரும் * தயிரும் இழுதும்[1] உடன் உண்ட
வாயான் * தூய அரி உருவில் குறளாய்ச் சென்று * மாவலியை
ஏயான் இரப்ப ** மூவடி மண் இன்றே தாவென்று * உலகேழும்
தாயான் * காயாமலர் வண்ணன் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 6

994 ஏனோர் அஞ்ச வெஞ்சமத்துள் * அரியாய்ப்பரிய இரணியனை *
ஊனார் அகலம் பிளவெடுத்த * ஒருவன் தானே இருசுடராய் **
வானாய்த் தீயாய் மாருதமாய் * மலையாய் அலைநீர் உலகனைத்தும்
தானாய் * தானுமானான் தன் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 7

995 வெந்தாரென்பும் சுடுநீறும் * மெய்யில் பூசிக் கையகத்து * ஓர்

[1] விழுதும்

சந்தார் தலை கொண்டு உலகேழும் * திரியும் பெரியோன் தான் சென்று ** - என்
எந்தாய்! சாபம் தீர் என்ன * இலங்கு அமுது நீர் திருமார்பில்
தந்தான் * சந்தார் பொழில் சூழ்ந்த * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 8

996 தொண்டாம் இனமும் இமையோரும் * துணைநூல் மார்பின் அந்தணரும் *
அண்டா! எமக்கே அருளாய் என்று * அணயும் கோயில் அருகெல்லாம் **
வண்டார் பொழில் இன்பழனத்து * வயலின் அயலே கயல் பாய *
தண்தாமரைகள் முகமலர்த்தும் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 9

997 * தாராவாரும் வயல் சூழ்ந்த * சாளக்கிராமத்து அடிகளை *
காரார் புறவின் மங்கை வேந்தன் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
ஆரார் உலகத்து அறிவுடையார் * அமரர் நல்நாட்டரசாள *
பேர் ஆயிரமும் ஓதுமின்கள் * அன்றி இவையே பிதற்றுமினே 10

**அடிவரவு:** கலை கடம் உலவு ஊரான் அடுத்து தாய் ஏனோர் வெந்தார் தொண்டு தாரா வாணிலா